# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*******

முறையீட்டு மனு எண்.234/2018/பே.1

ஆணை நாள்: 03-05-2019.

| | | |
|---|---|---|
| 1.05.11.2018 நாளிட்ட அருணன் வார மலர் செய்தி. | -- | இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முன்வந்து வழக்காக பதிவு செய்தது |
| 2.திருமதி. அரு.வெண்ணிலா, ஆசிரியர், அருணன் வார இதழ். | -- | மனுதாரர் |
| செயல் அலுவலர், கண்ணம்பாளையம் பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம். | -- | எதிர் மனுதாரர். |

ஆணை.

05.11.2018 நாளிட்ட அருணன் வார இதழில் கண்ணம்பாளையம் பேரூராட்சி சம்பந்தமாக வரப்பெற்ற செய்தியினை, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7(i) ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முன்வந்து முறையீடாக பதிவு செய்து, முறையீட்டு மனு எண். 234/2018 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி வார இதழில் வரப்பெற்ற கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ஆர்.ரவி என்பவர் மீதான புகார்கள் குறித்து விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 30.11.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ஆர்.ரவி தனது 11.12.2018 நாளிட்ட விளக்க அறிக்கையினை உரிய ஆவண நகல்களுடன் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் தனது 18.01.2019 நாளிட்ட கடிதத்தில் ஏற்கனவே மேற்படி நாளிதழில் தெரிவித்துள்ள புகார்களையே மீண்டும் தெரிவித்து கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ரவி என்பவர் மீது விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 24.12.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி, 04.02.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது எழுத்து பூர்வமான வாக்கு மூலத்தையும் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 28.01.2019 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவினை 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (முறையீடுகள் தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் தீர்வு காணுதல்) விதிகளில், விதி.4ன்படி படிவம்.1ல் பூர்த்தி செய்தும், விதி.6ன்படி கட்டணமாக ரூ.10/–க்கான நீதி மன்ற வில்லைக் கட்டணத்துடன் புகாருக்கான ஆதார ஆவணங்களுடன் சமர்ப்பிக்கத் தெரிவித்து முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்காத நிலையில் 21.02.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் மீண்டும் முறையீட்டு மனுதாரருக்கு நினைவூட்டு அனுப்பி முறையீட்டு மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்கத் தெரிவித்து 10 நாட்கள் அவகாசம் அளித்தும், மேற்படி அவகாசத்திற்குள் மனுவினை சமர்ப்பிக்காத பட்சத்தில் விசாரணையின் அடிப்படையில் தக்க ஆணை பிறப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் நாளது தேதி வரை தனது முறையீட்டு மனுவினை உரிய முறையில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

முறையீட்டு மனுதாரர் புகார் தெரிவித்துள்ள கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ஆர்.ரவி என்பவர் 28.02.2019 அன்று வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றுள்ளார். நாளிதழ் செய்தியில் வெளியிட்டுள்ள ஆர்.வி.எஸ்., கல்வி நிலைய கட்டுமானங்கள் குறித்து கள ஆய்வு மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவ ஆணைகளின்படி தொழில் நுட்ப அலுவலர் குழு ஏற்படுத்தப்பட்டு நடவடிக்கையில் உள்ள விவரங்கள் கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணைகள் மூலம் ஆணையிடப்பட்டும் தனது மனுவினை விதிகளின்படி முறையாக சமர்ப்பிக்காததால் மனு ஏற்பதற்கில்லை எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

இருப்பினும் ஆர்.வி.எஸ்.கல்வி நிறுவன கட்டுமானங்கள் தொடர்பாக தொழில் நுட்ப அலுவலர் குழுவின் கள ஆய்வு அறிக்கையினைப் பெற்று குறிப்பான பரிந்துரைகளுடன் அனுப்பி வைக்குமாறு கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு மே திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்

பெறுநர்

1.திருமதி.அ.வெண்ணிலா,
ஆசிரியர்,
133, பாலசுப்பிரமணியர் கோவில் தெரு.
இராமநாதபுரம்,
கோயம்புத்தூர்–641045.

2.செயல் அலுவலர்
கண்ணம்பாளையம் பேரூராட்சி,
கோவை மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கோவை மண்டலம்.
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக.